**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.56/2020**

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | P.W.1 |
| Name | : | திரு. சாமி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.10.2022.

முதல் விசாரணை -

நான் தற்போது எட்டிவாடி கிராமத்தில் வசிக்கிறேன். அறுவடை இயந்திரம் ஓட்டும் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரி தான் என் தந்தை கண்ணனை கொலை செய்தவர். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். 15.06.2019 அன்று இரவு சுமார் 10.00 மணியளவில் எங்கள் நிலத்திலேயே வைத்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். எங்கள் நிலத்தில் நாங்கள் வீடு கட்டி வசிக்கிறோம். எதிரி அவரது நிலத்தில் வீடு கட்டி வசித்து வருகிறார். எங்கள் இருவருக்கும் பொதுவான வரப்பு உள்ளது. எங்களுக்கு ரோடு வழி வழி உள்ளது. எங்கள் நிலத்து வழியாக தான் எதிரி செல்ல வேண்டும்.

இதனால் அடிக்கடி எங்களுக்குள் தகராறு வரும். பஞ்சாயத்தும் நடக்கும்.

எங்கள் நிலத்தில் உள்ள பயிர் எல்லாம் நாசமாகிவிடுகிறது என்பதால் எங்களுக்குள் சண்டை வரும். அடிக்கடி எங்களுக்குள் சமாதானம் ஆகிவிடும். சமாதானம் சம்மந்தமாக 10 பேர் கையொப்பம் போட்டுக் கூட கொடுத்துள்ளார்கள். எங்கள் நிலத்தின் வழியாக லைன் போட்டுக் கொடுத்தால் சண்டைக்கு வரமாட்டேன் என்று எதிரி சொன்னதால் லைன்போட நாங்கள் இடம் கொடுத்தோம். எதிரி எங்கள் நிலத்தில் லைன் போட்டுக் கொண்டார்.

இதற்காக தான் 10 பேர் கையொப்பம் போட்டுக் கொடுத்தார்கள். 15.06.2019 அன்று இரவு சுமார் 7.30 மணி முதல் 8.30 மணியளவில் எங்கள் நிலத்தில் ரயில்வே சுரங்க பாலத்திற்காக பள்ளம் தோண்டிக் கொண்டிருந்தார்கள். அப்போது, கம்பி கட்டும் பணியில் இருப்பவர்கள் அவருடைய நிலத்தில் சிறுநீர் கழித்துவிட்டதாக சொல்லி என்னையும் என் அம்மா மற்றும் அப்பாவையும் சாக்கிட்டு கெட்ட வார்த்தைகளால் திட்டி குத்திவிடுவேன், கொன்றுவிடுவேன் என்று திட்டினார்.

அந்த இடத்தை நாங்கள் லீசுக்கு விட்டு சம்பாதித்து வருவதால் நீங்கள் சம்பாதிப்பத்றகு என் நிலம் தான் கிடைத்ததா? என்று பயங்கரமான கெட்ட வார்த்தையால் எதிரி பேசினார். நான், என் அம்மா மற்றும் அப்பா ஆகியோர் சென்று கேட்டோம். அதற்கு எதிரி எங்கள் நிலத்தில் இருந்த நாட்டு தேக்கு கட்டையால் என்னை மண்டையில் அடித்ததில் அந்த தேக்கு கட்டை பீஸ் பீஸாக உடைந்துவிட்டது.

இதைக் கேட்க வேகமாக வந்த என் அப்பாவை உடைந்த கூர்மையான தேக்கு கட்டையால் சாட்சி குச்சி என்றும் சாட்சியம் அளிக்கிறார், இடது மார்பகத்தில் குத்திவிட்டார். என் அம்மா பக்கத்தில் இருந்தார். பிறகு நான் மற்றொரு உடைந்த துண்டு தேக்கு கட்டையை எடுத்து எதிரியை அடித்தேன். என்னையும் குத்தி

விடுவார் என்று தற்காப்பிற்காக தான் எதிரியை நான் அடித்தேன். எதிரி ஓடிவிட்டார். பிறகு என் மாமா சேகர் வந்தார்.

அதன் பிறகு என்னை வடமாதிமங்கலம் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று இடது புற மண்டையில் தையல் போட்டார்கள். எதிரி என்னை நாட்டு தேக்கு கட்டையால் அடித்ததால் தான் எனக்கு மண்டையில் காயம் ஏற்பட்டது. என் அப்பா சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். நான் மீண்டும் சம்பவ இடத்திற்குச் சென்றேன். அங்கு காவல் ஆய்வாளர் இருந்தார். அவர் என்னை களம்பூர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை செய்து நான் சொல்ல சொல்ல ஆய்வாளர் எழுதியதை நான் படித்து பார்த்து கையொப்பம் போட்டேன்.

நான் கொடுத்த புகார் என்னிடம் தற்போது காட்டப்படுவது தான். அது **அ.த.சா.ஆ-1-**ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. தேக்கு கட்டையை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் குச்சி வடிவிலான தேக்கு குச்சியால் தான் என் அப்பாவை குத்தியது. அது **சா.பொ.1-**ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. நீளமான தேக்கு கொம்பால் தான் எதிரி என்னை தாக்கினார். அது **சா.பொ.2**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. அதன் பிறகு போலீசார் என்னை வீட்டிலும் காவல் நிலையத்திலும் வைத்து விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-</u>**

நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் வாடகைக்கு நெல் அறுக்கும் இயந்திரத்தில் ஓட்டுநராக பணிபுரிகிறேன். அன்றைய தினம் பகல் நேரத்தில் நான் என் நண்பர்களுடன் ஜமுனாமரத்தூர் சென்றேன் என்றால் சரிதான். நான் மாலை 4.30 மணிக்கு எல்லாம் வீட்டிற்கு வந்துவிட்டேன். ரோடு ஓரமாக என் வீடு என்றால் சரிதான். கிழக்கு மேற்கு ரோடில் எங்கள் வீடு வடக்கு பார்த்து உள்ளது. எங்கள் வீட்டிலிருந்து 50 அடி தூரம் தள்ளி பாலம் உள்ளது என்றால்

எங்கள் வீட்டிலிருந்து 20, 30 அடி தூரத்திலேயே வீட்டின் பின்புறத்தில் பூமியடி பாலம் தொடங்குகிறது.

எங்கள் வீட்டிலிருந்து 2 கழனி தள்ளி இரயில்வே பாதை உள்ளது. எங்கள் வீட்டிற்கும் இரயில்வே பாதைக்கும் இடையே உள்ள நிலம் எங்களுக்கு சொந்தமான நிலம். என் வீட்டிற்கு பின்னால் செல்லும் ரோடு தஞ்சியம்மன் கோவில் மலை அடிவாரம் வரை செல்கிறது என்றால் சரிதான். பூமியடி பாலம் கட்டுவதற்காக எங்கள் வீட்டிற்கு எதிரில் பாலம் பணி செய்பவர்கள் ஒரு கூடாரமும், இரயில்வே பாதைக்கு மேற்கே மற்றொரு கூடாரமும் போட்டிருந்தார்கள் என்றால் சரிதான்.

இரயில்வே ரோட்டிற்கு மேற்கே உள்ள கூடாராத்திற்கு ஒட்டியே பொருள் வைப்பதற்காக ஒரு ஷெட் போடப்பட்டது என்றால் சரிதான். எங்கள் நிலத்திலும் சிமெண்ட், ஜல்லி, கம்பி மற்றும் சிமெண்ட் ஜாலிகள் ஆகியவைகளை போட்டு வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். ஐயப்பன் என்பவரும் என் அப்பாவும் தான் அந்த பொருள்களுக்கு பாதுகாப்பிற்காக சம்பளத்திற்கு போட்டு வைத்திருந்தார்கள் என்றால் சரிதான்.

சுமார் 6 மாதங்கள் அந்த பாலம் அமைக்கும் பணி நடைபெற்றது என்றால் சம்பவத்திற்கு 1 மாதம் முன்பே பாலம் அமைக்கும் பணி நடந்து வந்தது. எதிரியின் வீட்டிற்கு பின்புறத்தில் இரயில் பாதையை தாண்டி கொஞ்ச தூரத்தில் ஏழுமலை என்பவரின் வீடு உள்ளது என்றால் சரிதான். என் சகோதரியின் கணவர் ரமேஷ் என்பவர் ரோட்டில் ஸ்வீட் கான் கடை வைத்திருப்பவர் என்றால் சரிதான். அவர் தற்போது எங்கள் வீட்டிற்கு எதிர் புறம் இரயில்வே கூடாரம் போட்ட இடத்தில் உள்ளார் என்றால் சரிதான்.

என் அப்பா இறந்த பிறகு தான் ரமேஷ் அங்கு குடிவந்தார் என்றால் சரிதான். அவருடைய சொந்த ஊர் வேலூர் என்றால் சரிதான். சேகரின் வீடு தஞ்சியம்மன்

கோவிலுக்கு போகும் வழியில் எங்கள் வீட்டிலிருந்து ஒரு பர்லாங்கு தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். சேகர் இந்த வழக்கில் சாட்சியாக உள்ளார் என்றால் சரிதான். சேகர் எனக்கு தாய் மாமன் உறவுமுறை. பன்னீர் என்பவரின் வீடு பூமியடி பாலம் முடியும் இடத்தில் உள்ளது என்றால் சரிதான்.

பன்னீர் எனக்கு பங்காளி உறவுமுறை என்றால் சரிதான். வள்ளிக்கண்ணன் என்பவர் எட்டிவாடி ஊருக்குள் உள்ளார் என்றாலும் நாங்கள் வசிக்கும் பகுதியில் இல்லை என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு பின்புறம் ரோடு, ரோட்டிற்கு அடுத்து எங்கள் நிலம் அதற்கு அடுத்து எதிரியின் நிலம் என்றால் சரிதான். நாங்கள் வசிக்கும் பகுதிக்கு இடபுறம் வறட்டுக் குட்டை என்ற பகுதி உள்ளது என்றால் சரிதான்.

எதிரியின் வீட்டிற்கு வறட்டுக் குட்டை வழியாகவும் செல்ல வழி உள்ளது என்றால் உண்டு, சம்பவத்திற்கு பிறகு சுரங்கப் பாதை அமைத்த பிறகு தான் எதிரிக்கு வறட்டுக் குட்டை வழியை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அதற்கு முன்பு எங்கள் நிலத்தின் வழியாக தான் எதிரியின் நிலத்திற்கு வழி. வறட்டுக் குட்டைக்கு நான்கு புறமும் கரை உள்ளது என்றால் சரிதான்.

வறட்டுக் குட்டையின் ஒரு கரையானது எதிரியின் நிலத்தில் இறங்குகிறது என்றால் எங்கள் பங்காளி பன்னீர் மற்றும் முருகன் என்பவர்களின் நிலத்தில் தான் இறங்குகிறது. மேற்படி வழி எல்லாம் சுரங்கப் பணிக்கு பிறகு தான் ஏற்படுத்தப்பட்டது. எங்கள் பங்காளிகள் பன்னீர் மற்றும் முருகனின் நிலங்களுக்கு பிறகு எதிரியின் நிலம் என்றால் சரிதான்.

வறட்டுக் குட்டை என்பது இயற்கையாக அமைந்த பகுதி, அந்த வறட்டுக்கு குட்டைக்கு நான்குபுறமும் உள்ளது என்றாலும் மேற்படி கரையை தான் காலம் காலமாக பாதையாக பயன்படுத்தப்பட்டு வந்தது என்றால் முள்புதராக இருந்ததால்

மேற்படி கரையை பாதையாக பயன்படுத்த முடியாமல் இருந்து வந்தது, இரயில்வே சுரங்க பணி முடித்ததால் வழிக்காக வேண்டி தடம் செய்யப்பட்டு தற்போது அந்த தடத்தில் லாரியே போகும் அளவுக்கு வழி உள்ளது.

சுரங்கப் பாதைக்கு பின்பு தான் வழி ஏற்படுத்தப்பட்டது என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக தான் புதாராக இருந்தது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் வீடு அதற்கு அடுத்து எதிரிக்கு சொந்தமான காலி இடம் அதன் பிறகு இரயில்வே ரோடு அதன் பிறகு தான் ஐயப்பனின் நிலத்தில் ஷெட் என்றால் சரிதான்.

சுரங்கப் பாதை போட்டுக் கொண்டிருக்கும் வேளையில் பொதுமக்கள் ஐயப்பனின் நிலத்தில் ஷெட் அருகில் ஏறி ரயில்வே டிராக் தாண்டி அதற்கு அடுத்திருந்த எதிரியின் நிலம் வழியாக சென்றுக் கொண்டிருந்தார்கள் என்றால் எங்கள் நிலம் வழியாக தான் பொதுமக்கள் சென்றுக் கொண்டிருந்தார்கள். பொதுமக்கள் போக வர நாங்கள் ஆட்சேபனை எதுவும் செய்யவில்லை என்றால் ஆட்சேபனை செய்யவில்லை, காரணம் நாங்கள் எங்கள் நிலத்தை இரயில்வே காண்டிராக்டரிம் லீசுக்கு கொடுத்திருந்தோம்.

லைன் போடுவதற்காக 10 பேர் கையொப்பம் போட்டுக் கொடுத்த ஆவணத்தை போலீசார் விசாரணையில் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். எங்களுக்கும் எதிரிக்கும் வழி சம்மந்தமாக அடிக்கடி நடக்கும் தகராறிக்காக எப்பொழுதாவது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுக்கவில்லை. அழகேசன் என்பவர் தலைமையில் தான் அந்த 10 பேர் கையொப்பம் போட்டுக் கொடுத்தார்கள் என்றால் சரிதான், அழகேசன் என்பவர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், அவரும் கையொப்பம் போட்டுக் கொடுத்துள்ளார்.

சம்பவ சமயத்தில் எங்களுக்கும் எதிரிக்கும் சுமார் 50 மாடுகள் இருந்திருக்கும்

என்றால் எங்களுக்கு 4, 5 மாடுகளும் எதிரிக்கு 4, 5 மாடுகளும் இருந்தது. இரயில்வே டிராக்கிற்கும் எதிரியின் வீட்டிற்கும் இடையில் உள்ள இடத்தில் தான் எதிரி மாடுகளை கட்டி வைத்திருந்தார் என்றால் அவரின் வீட்டிற்கு பின்புறம் தான் மாடுகளை கட்டி வைத்திருந்தார். மாடு கட்டி வைத்திருந்த இடத்திற்கு அருகில் நாங்கள் லீசுக்கு விட்டிருந்த இடம் என்றால் இடையில் வைக்கோல்போர் போட்டு வைத்திருந்த இடம் இருந்தது.

அன்றைய தினம் என் அம்மாவிற்கு அடி எதுவும் படவில்லை என்றால் சரிதான். எதிரி தஞ்சியப்பனின் மனைவியின் பெயர் பவானி, அவருக்கு காயம் பட்டிருந்தது என்றால் சரிதான். பவானி என்பவரை யார் அடித்தார்கள் என்றால் நான் தான் அடித்தேன். என் அப்பாவிற்கு காயம் பட்டதில் நெஞ்சிலிருந்து இரத்தம் வந்ததா என்றால் இரத்தம் வந்தது. என் அப்பா அணிந்திருந்த பணியனில் இரத்தம் பட்டதா என்றால் பட்டது அதை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை.

என் அப்பாவை மடியில் போட்டு அழுததில் என் அம்மாவின் உடையிலும் இரத்தமானது என்றால் இரத்தம் ஆகவில்லை. நாங்கள் சென்று கேள்வி கேட்டு சம்பவ நடந்தது மொத்தம் சுமார் எவ்வளவு நிமிடம் என்றால் சுமார் 5 நிமிடத்தில் எல்லாம் முடிந்துவிட்டது. ஐயப்பனின் ஜெட்டிலிருந்த நபர்கள் எதிரியை ஏன் இப்படி திட்டுகிறாய் என்று கேட்டார்கள் என்றால் அவ்வாறு எதுவும் கேட்கவில்லை.

சம்பவம் நடக்கும் போது ஐயப்பனின் ஜெட்டிலிருந்த நபர்கள் யாரும் வந்து தடுக்கவில்லை என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு எதிரில் இருந்த ஜெட்டில் 20 பேர் தங்கியிருந்தார்கள் என்றால் யாரும் தங்கவில்லை, ஐயப்பனின் ஜெட்டில் தான் 4, 5 நபர்கள் தங்கியிருந்தார்கள். அவர்களின் பெயர்கள் எனக்கு தெரியிவில்லை,

அவர்கள் தமிழ் மொழி பேசுபவர்கள் தான். வேலைக்காக சுமார் 50 நபர்கள் தங்கயிருந்தார்கள் என்றால் சரியல்ல, 4, 5 நபர்கள் தான் தங்கியிருந்தார்கள்.

அந்த சமயத்தில் ரயில்வே பணி எதுவும் நடக்கவில்லை, ஆனால் பொருட்கள் மட்டும் வந்து இறங்கியிருந்தது. அந்த 4, 5 நபர்கள் மட்டும் சிறிய பணிகளை செய்து வந்தார்கள். அப்போது ஐயப்பன் என்பவர் இல்லை. ஐயப்பன் எப்போது வந்தார் என்று எனக்கு தெரியாது, நான் அப்போது மருத்துவமனைக்குச் சென்றுவிட்டேன். சம்பவம் பற்றி தெரிந்து எவ்வளவு நேரம் கழித்து சேகர் வந்தார் என்றால் சத்தம் கேட்கும் போதே சேகர் வந்துக் கொண்டே இருந்தார், வரும்போதே அவர் சம்பவத்தை பார்த்துக் கொண்டே வந்தார்.

அந்த இடத்தில் இரவு நேரம் என்பதால் விளக்கு எதுவும் போட்டு வைக்கப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் நிலவு ஒளி இருந்தது. அந்த நேரத்தில் நிலவு ஒளி இருந்தது என்று நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடத்திலிருந்து வடமாதிமங்கலம் செல்வதற்கு வேலூர் ரோடு பிரிவிற்கு பிறகு ஆரணி ரோட்டில் வர வேண்டும். சுமார் 4 கி.மீ. தூரத்தில் மருத்துவமனை உள்ளது.

நான் மருத்துவமனைக்கு நடந்து சென்றேனா என்றால் என் மாமா சேகர் என்பவர் இரு சக்கர வாகனத்தில் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். சேகர் சம்பவ சத்தம் கேட்டு வரும்போதே சம்பவத்தை பார்த்துக் கொண்டு வந்ததாக நான் வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை கேள்விப்பட்டு தான் சேகர் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார் என்றால் சரியல்ல.

வடமாதிமங்கலம் மருத்துவமனையில் யார் இருந்தார்கள் என்றால் ஒரு பெண்மணி இருந்தார், அவருடைய பணி பற்றி எனக்கு தெரியாது, அவர் எனக்கு

தையல் போட்டார், சம்பவத்தை பற்றி அவர் என்னிடம் கேட்டார், நான் நடந்தவற்றைச் சொன்னேன். வடமாதிமங்கலத்திலிருந்து நேராக என் வீட்டிற்கு தான் வந்தேன் என்றால் சரிதான். அதற்குள் என் போன் மூலமாக காவல் ஆய்வாளர் வந்துவிட்டார் என்று தகவல் சொன்னார்கள் என்றால் நானாகவே வந்தேன், அங்கு ஆம்புலன்ஸ் வந்திருந்தது, காவல் ஆய்வாளர் அங்கு இருந்தார்.

நான் வடமாதிமங்கலம் மருத்துவமனைக்கு சென்று வர சுமார் அரை மணி நேரம் ஆகியிருக்கும் என்றால் சரிதான். இரவு 9.00 மணிக்கு திரும்ப வந்துவிட்டேன் என்றால் சரிதான். என் அப்பாவின் உடம்பில் நான் எத்தனை காயங்கள் பார்த்தேன் என்றால் ஒரே ஒரு காயம் தான் பார்த்தேன், அது இடதுபுற மார்பில் இருந்தது. பவானிக்கு ஏற்பட்ட காயங்கள் தொடர்பாக பவானி என்பவர் புகாரின் அடிப்படையில் என் பெயரிலும், என் அம்மா மற்றும் அப்பா பெயரிலும் களம்பூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சாட்சி தற்போது வழக்கே போடவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார்.

வேலு, த/பெ ராமலிங்கம் என்பவர் எங்கள் ஊரில் உள்ளார் என்றாலும் அவருடன் என் தகப்பனாருக்கு வழி சம்மந்தமாக தகராறு ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் நிலத்திற்கு கீழே சந்திரன் என்பவரின் நிலம் உள்ளது என்றாலும் அவருடன் என் அப்பாவிற்கு வரப்பு சம்மந்தமாக தகராறு உள்ளது என்றால் சரியல்ல. ஜெயவேலு, த/பெ மாசிலாமணி என்பவர் எங்கள் பகுதியில் வாழ்பவர் என்றால் அப்படி ஒரு நபர் இல்லை.

எங்கள் வீட்டிற்கு அருகில் பால் ஸ்டோர் உள்ளது என்றால் இல்லை. ரொம்ப தூரத்தில் உள்ளது என்றால் எட்டிவாடி கூட்ரோட்டில் உள்ளது. பால் ஊற்ற வரும் சேட்டு மற்றும் வேலா ஆகியோரிடமும் என் தந்தைக்கு தகராறு உள்ளது என்றால்

சரியல்ல. எங்களுக்கு ஊர் உள்ளேயும் ஒரு வீடு உள்ளது என்றால் சரிதான். குமார், சேட்டு மற்றும் காந்தி ஆகியோர்களை எனக்கு தெரியும் என்றால் சரிதான், அவர்கள் பால் ஊற்றும் இடத்திற்கு வருவார்கள்.

செல்வி, க/பெ கங்காதரன் என்பவரிடமும் என் அப்பா தகராறு செய்து பலமுறை அடித்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. சாட்சி தற்போது மேற்படி கங்காதரன் என்பவர் திருட்டு வேலை செய்வதால் அடித்திருக்க வாய்ப்பு உண்டு என்று சாட்சியம் அளிக்கிறார். என் சித்தப்பாவின் பெயர் சங்கர் என்றால் சரிதான். முருகேசனும் பங்காளி உறவுமுறை தான். சங்கருக்கும் முருகேசனுக்கும் இடையே ஏற்பட்ட தகராறில் என் அப்பா சங்கரையும் முருகேசனையும் பலமுறை தாக்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

என் நிலத்திற்கு மேலாக ஏழுமலை என்பவரின் நிலம் உள்ளது என்றால் சரிதான், அவரிடமும் என் அப்பாவிற்கு பிரச்சனை உள்ளது என்றால் சரியல்ல. தஞ்சியம்மன் கோவிலுக்கு போகும் வழியில் எங்கள் வீடு உள்ளதால் கோவிலுக்குச் செல்லும் பொதுமக்களிடமும் என் அப்பா தகராறு செய்வார் என்றால் வாய்ப்பே இல்லை.

முதல் விசாரணையில் சம்பவத்தை பற்றி நான் சொல்லியுள்ளவாறு எந்தவித சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான், என் அம்மா மற்றும் அப்பா ஆகியோர் எதிரியை எந்த இடத்தில் வைத்து கேட்டோம் என்றால் எங்கள் வயலின் கடைசி பகுதியில் நின்று கேட்டோம். நாங்கள் நின்ற பகுதி மட்டமாக இரயில்வே துறையினர் வழியாக செய்திருந்தார்கள் என்றால் சரிதான்.

நாங்கள் இருந்த இடத்திற்கும் எதிரியின் மாடுகள் கட்டப்பட்டிருந்த இடத்திற்கும் சுமார் எவ்வளவு அடி இருக்கும் என்றால் 75 அடி இருக்கும். இருட்டாக இருந்தது என்பதால் எதிரி எங்களை அடிக்கும் போது சத்தம் மட்டும்

தான் கேட்டது என்றாலும் ஆள் யார் இருந்தார்கள் என்று தெரியாது என்றாலும் சம்பவத்தில் நாங்கள் தான் இருந்தோம், யார் யார் என்று நன்றாக தெரியும், நிலவு ஒளி இருந்தது.

என்னை எதிரி நாட்டு தேக்கு கட்டையால் மண்டையில் அடிக்கவில்லை என்றாலும் அதனால் நாட்டு தேக்கு கட்டை பீஸ் பீஸாக உடையவில்லை என்றால் அடித்தார். என் அப்பாவை உடைந்த கூர்மையான தேக்கு குச்சியால் இடது மார்பில் குத்தியதாக சொல்வது பொய் என்றால் என் கண் முன்னால் தான் என் அப்பாவை குத்தினார். நான் தற்காப்பிற்காக எதிரியை அடித்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

எதிரிக்கும் எங்களுக்கும் பொதுவான வரப்பு இருப்பது பற்றி என் புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை, ஆனால் என் வயலை தாண்டி தான் எதிரி போக வேண்டும் என்பதை பற்றி சொல்லியுள்ளேன். வழி சம்மந்தமாக அடிக்கடி எங்களுக்குள் சண்டை வந்து பஞ்சாயத்து நடக்கும் அப்படி ஒருமுறை நடக்கும் போது லைன் போட அனுமதித்தது சம்மந்தமாக 10 பேர் கையொப்பமிட்டது பற்றி நான் என் புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.

நான் எதிரியை கேட்க சென்ற போது என்னுடன் என் அம்மா வந்ததாக புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். எதிரி குத்திவிடுவேன் என்றும் கொன்றுவிடுவேன் என்றும் சொன்னதைப் பற்றி நான் என் புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சொல்லலியுள்ளேன்.

அந்த இடத்தை லீசுக்கு விட்டு சம்பாதிக்க என் நிலம் தான் கிடைத்ததா என்று பயங்கரமான கெட்ட வார்த்தைகளால் எதிரி திட்டினார் என்பதை பற்றி நான் என்

புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சொல்லலியுள்ளேன். நான் உடைந்த மற்றொரு துண்டு தேக்கு கட்டையை எடுத்து எதிரியை அடித்தது சம்மந்தமாக நான் என் புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சொல்லலியுள்ளேன்.

என் அப்பா ரொம்ப கோபக்காரர், அனைவரையும் திட்டுவார், பேசும் போதே அடித்து விட்டு தான் பேசுவார் என்றால் சரியல்ல. அன்றைய தினம் என் அப்பா வழக்கமாக வரும் வறட்டுக் குட்டை பாதையை விட்டுவிட்டு லீசுக்கு விட்டுள்ள பொது வழியாக எதிரி தன் வீட்டிற்கு சென்றார் என்றால் சரிதான். அதை பார்த்த என் அப்பா எதிரியை கேவலமாக பேசினார் என்றாலும், எதிரியின் வீட்டிற்கு சென்று அவரது மனைவியையும் திட்டி தாக்கினோம் என்றால் சரியல்ல, ஐயப்பன் வாட்ச்மேன் என்பவரும் எங்களுடன் இருந்தார்.

நாங்கள் தாக்கியதை பார்த்து விட்டு இரயில்வே கூடாரத்தில் தங்கியிருந்த ஊழியர்கள் மற்றும் அக்கம் பக்கத்தினர் வந்து எங்களை தடுத்து விலக்கினார்கள என்றால் சரியல்ல. அவ்வாறு விலக்கும் போது என் அப்பாவை விலக்கும் நபர்கள் தள்ளி விட்டதில் என் அப்பா மாடு கட்டும் கூரான கூட்டக் கொம்பில் குத்தி இடது பக்க மார்பில் காயமானது என்றால் சரியல்ல, சம்பவம் நடந்தது எங்கள் நிலத்தில், மாடு கட்டும் இடம் 75 அடி தூரத்தில் இருக்கும் நிலையில் அவ்வாறு சொல்வது தவறு.

வழக்கிற்காக 75 அடி தூரத்தில் மாடு கட்டும் இடம் உள்ளது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக சம்பவ இடத்தை எதிரிகள் மாடு கட்டும் இடத்திலிருந்து தள்ளி சொல்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையான சம்பவத்தை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்டாக பொருட்களை போலீசார் சொல்லிக் கொடுத்ததற்கிணங்க நான்

பொய்யாக அடையாளம் காட்டி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நீதிமன்றத்தில் உள்ள கொம்பில் தான் இரத்தமே உள்ளது.

வழக்கிற்காக போலீசார் சான்று பொருட்கள் 1 மற்றும் 2ஐ ஏற்பாடு செய்ததை நான் அடையாளம் காட்டுகிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** - இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.

Additional Sessions Judge,

Arani.